"STANDARDIZATION ON PURIFICATION PROCESS OF POORAM – A COMPARATIVE ANALYSIS"

Dissertation Submitted To

THE TAMILNADU Dr.M.G.R MEDICAL UNIVERSITY

Chennai – 32

For the Partial fulfillment in Awarding the Degree of

DOCTOR OF MEDICINE (SIDDHA)

(Branch – VI, Nanju Noolum Maruthuva Neethi Noolum)

Department of Nanju Noolum Maruthuva Neethi Noolum

Government Siddha Medical College

Palayamkottai – 627 002

OCTOBER – 2019

GOVT. SIDDHA MEDICAL COLLEGE, PALAYAMKOTTAI

DECLARATION BY THE CANDIDATE

I hereby declare that this dissertation entitled "**Standardization on purification process of POORAM - A comparative analysis**" is a bonafide and genuine research work carried out by me under the guidance of **Dr. M. Thiruthani**, **M.D(s).,** Professor & Head of the department, Post Graduate Department of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt.Siddha Medical College, Palayamkottai, and the dissertation has not formed the basis for the award of any Degree, Diploma, Fellowship or other similar title.

Date: **Signature of the Candidate**

Place: Palayamkottai **Dr. S. L. PRAKASH**

CERTIFICATE

This is to certify that the dissertation entitled "**Standardization on purification process of POORAM - A comparative analysis**" is a bonafide work done by **Dr. S. L. PRAKASH (Reg.No. 321616008)** Govt. Siddha Medical College, Palayamkotai in partial fulfillment of the university rules and regulations for award for **MD(s) Nanju Noolum Maruthuva Neethi Noolum** under my guidance and supervision during the academic year 2016-2019.

Name and signature of the Guide :

Name and signature of the Head of Department:

Name and signature of the Principal:

ACKNOWLEDGEMENT

- First and foremost, I thank My **Guru Navajyothi Sree Karunakara Guru And Abhivanditha Sisyapoojitha Janani** for giving me this opportunity and providing the strength and energy to fulfil this commitment.
- I would like to extend my thanks to **Siddhars**, because of their blessing to complete this work.
- I express my sincere thanks to **Secretary**, Ministry Of AYUSH, New Delhi.
- I wish to express my sincere thanks **to The Vice Chanceller**, The Tamil Nadu Dr.M.G.R.Medical University, Chennai, **The Director** of Indian Medicine and Homeopathy and **The Joint Director** of Indian Medicine and Homeopathy, Chennai for permitting me to do this study.
- I also wish to convey my deep gratitude to the Principal **Prof. Dr. S. Victoria, M.D.(s),** of Government Siddha Medical College, Palayamkottai.
- I also wish to convey my deep gratitude to the Former Principal, **Prof. Dr. R. Neelavathy, M.D.(s), Ph.D.,** of Government Siddha Medical College, Palayamkottai.
- I would like to express my deep and sincere gratitude to my **guide Prof. Dr. M. Thiruthani M.D (S), Head of the Department, Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum**, Govt. Siddha Medical College. Palayamkottai, for his encouragement, moral support, valuable guidance, Insightful advice and constructive feedback during the entire period of this Dissertation work.
- My cordial thanks to **Prof. Dr. M.P. Abdul Kadar Jeyalani, M.D. (S)**, Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt. Siddha Medical College. Palayamkottai, for his encouragement and valuable support during this Dissertation.
- I am grateful to **Dr. Sulfin Nihar , M.D.(S), Lecturer,** Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt. Siddha Medical College. Palayamkottai, for her advice and help in carrying out this Dissertation work successfully
- I am grateful **to Dr. A. Rajarajeshwari, M.D. (S), Lecturer, Grade-II**, Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt. Siddha Medical College. Palayamkottai, for her advice and help in carrying out this Dissertation work successfully.
- I thanks to **Dr. G. Chenthamarai Selvi, M.D.(S), Lecturer, Grade-II** , Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt. Siddha Medical College. Palayamkottai, for her guidance, in carrying out this Dissertation work.

❖ I am grateful to **Dr. S. Balamani, M.D.(S), Lecturer, Grade-II** , Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt. Siddha Medical College. Palayamkottai, for her advice and help in carrying out this Dissertation work successfully.

❖ I thanks to **Dr. Mukilan M.D. (S), Lecturer, Grade-II** , Department Of Nanju Noolum Maruthuva Neethi Noolum, Govt. Siddha Medical College. Palayamkottai, for her guidance, in carrying out this Dissertation work.

❖ I thanks to **Dr. Thirumavalan, M.D.(S), Lecturer, Grade-II** , Department Of Gunapadam, Govt. Siddha Medical College. Palayamkottai, for her guidance, in carrying out this Dissertation work.

❖ It was my privilege to express my sincere thanks to **Prof. N. Nagaprema, M.Sc., Head of the Department** and the entire Staffs of Biochemistry department, Government Siddha Medical College, Palayamkottai for their help in chemical analysis for their work.

❖ My sincere thanks to **Dr. M. Kalaivanan, M.Sc., Ph.D., Senior Lecturer,** P.G. Department of Pharmacology, Govt. Siddha Medical College. Palayamkottai, for his valuable guidance in this Dissertation work.

❖ My sincere thanks to **Asst. Professor Dr. M. Johnson, Director**, Centre for Plant Biotechnology, Department of Botany, St. Xavier's College (Autonomous), and **Research Scholars** for their valuable guidance and support in chemical analysis and quantitative analysis for this work.

❖ I express my thanks to Rtd. **Associate professor Dr. I.G. Shibi, M.Phil. Ph.D.**, Sree Narayana College, Kannur for their valuable guidance and support in this Dissertation work.

❖ I express my thanks to **Dr. P. Sathiyarajeswaran, Assistant Director (S-II) I/C**, Siddha Central Research Institute, Central Council for Research in Siddha, Chennai for the guidance in identification of minerals, raw drugs.

❖ My sincere thanks to **Dr.P.Radha, Research Officer – Botany (In/charge),** Siddha Medicinal Plant Garden (SMPG), CCRS, Mettur for the guidance in identification of herbal drugs.

❖ I would like to pay my best regards to **Dr. Murugesan, Scientific officer,** Grade I,SAIF,IIT,Chennai-36 for carrying out for the Quantitative analysis of the drug chosen by me for my Dissertation work.

- I express my thanks to the **Librarian, Tmt. T. Poonkodi, M.A., MIIS** and her staffs for their cooperation during the study.
- I thank my Father **Mr. K. Soman**, and my Mother **Mrs. L. Leela** for giving this opportunity and the blessings to fulfil this work.
- I express my thanks to my wife **Mrs. V.S. Nirmala** for the support of this work.
- I thank my friend **Dr. S.R. Pholtan Rajeev and all other friends** of Nanju Noolum Maruthuva Neethi Noolum Department for their timely help in completing this Dissertation work.
- I gratefully acknowledge the assistance provided by all other faculties and staffs of GSMC, Palayamkottai who rendered their cooperation throughout the course of study.
- I also thank all my friends who helped me throughout the study, without whom this work will be impossible.
- Finally, I am very thankful to the computer centre **Maharaja DTP services** Tiruchendur road, Palayamkottai for his kind co-operation in bringing out this dissertation work in an excellent format.

The Tamil Nadu Dr. M.G.R. Medical University

69, Anna Salai, Guindy, Chennai - 600 032.

This certificate is awarded to Dr/~~Mr/Mrs~~ S.L. PRAKASH

for participating as ~~Resource Person~~ / Delegate in the XXIII Workshop on

"RESEARCH METHODOLOGY & BIOSTATISTICS"

Organized by the Department of Siddha,

The Tamil Nadu Dr. M.G.R. Medical University from 6th to 10th March 2017.

Dr. N. KABILAN, M.D.(Siddha) PROF & HEAD Dept of Siddha	Dr. T.BALASUBRAMANIAN M.S.,D.L.O., REGISTRAR	Prof. Dr. S.GEETHALAKSHMI, M.D.,Ph.D., VICE CHANCELLOR

GOVERNMENT SIDDHA MEDICAL COLLEGE
PALAYAMKOTTAI

SCREENING COMMITTEE

Registration No. of the Candidate:……………………….

DEPARTMENT OF NANJU NOOLUM MARUTHUVA NEETHI NOOLUM

This is to certify that the dissertation topic **Standardization of "PURIFICATION PROCESS OF POORAM" - a Comparative analysis** has been approved by the screening committee.

Branch	Department	Name	Signature
1	**PothuMaruthuvam**	**Dr.A.Manoharan. MD(S)., Professor**	D. [signature] 26.5.2017
2	**Gunapadam**	**Dr.A.KingslyMD(S)., Associate Professor**	[signature] 26/5/17
3	**SirappuMaruthuvam**	**Dr.A.S.Poongodi KanthimathiMD(S)., Professor**	A.S.[signature] 26/5/17
4	**KuzhandhaiMaruthuvam**	**Dr.D.K.Soundararajan. MD(S)., Professor**	D.K.[signature] 26/5/17
5	**NoiNadal**	**Dr.S.VictoriaMD(S)., Professor**	for M.Krishnan 26/5/17
6	**NanjuNoolMaruthuvam**	**Dr.M.Thiruthani. MD(S)., Professor** for	[signature] 26/5/17

Remarks:

[signature] 26/5/17
PRINCIPAL
Govt. Siddha Medical College.
Palayamkottai.

சித்தமருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்
(மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம், ஆயுஷ் அமைச்சகம், இந்திய அரசு)
सिद्ध केंद्रीय अनुसन्धान संस्थान
(सी.सी.आर.एस., चेन्नई, आयुष मंत्रालय, भारत सरकार), अण्णा सरकारी अस्पताल परिसर, अरुम्बाक्कम, चेन्नई - 600106
SIDDHA CENTRAL RESEARCH INSTITUTE
(Central Council for Research in Siddha, Chennai, Ministry of AYUSH, Government of India)
Anna Govt. Hospital Campus, Arumbakkam, Chennai – 600106, E-mail: crisiddha@gmail.com
Phone: 044-26214925, 26214809, Web: http://crisiddha.tn.nic.in

F.No.: **SCRI/AMDRL/2019-20/ICP-OES/06** 26-04-2019

AUTHENTICATION CERTIFICATE

Sample Name	: Pōram
Sample submitted by	: Dr.S.L. Prakash
Institutional details	: Department of PG Nanju Maruthuvam, Govt. Siddha Medical College, Palyamkottai.

It is certified that the sample Pōram is identified as "Mercurous chloride" based on the identification test by Inductively Coupled Plasma-Optical Emission Spectroscopy (ICP-OES). The spectrum of mercury at 184.887 nm was studied.

KParthasarathy.

डॉ. के.पार्थसारथी ,एम.एससी.,एम.फिल.,पीएच.डी
Dr. K. PARTHASARATHY, M.Sc., M.Phil., Ph.D
अनुसंधान अधिकारी (रसायण)
Research Officer (Chemistry)
सिद्ध केन्द्रीय अनुसंधान संस्थान / Siddha Central Research Institute
केन्द्रीय सिद्ध अनुसंधान परिषद / Central Council for Research in Siddha
आयुष मंत्रालय, भारत सरकार / Ministry of AYUSH, Govt. of India
अरुम्बाक्कम, चेन्नई - 600 106. / Arumbakkam, Chennai-600 106.

சித்த மருத்துவ மூலிகைத் தோட்டம்
(மத்திய சித்தமருத்துவ ஆராய்ச்சிக் குழுமம்)
(ஆயுஷ் அமைச்சகம், இந்திய அரசு.)
सिद्ध औष धीयपादपउद्यान, कावेरीनगर, मेट्टूरबांध
SIDDHA MEDICINAL PLANTS GARDEN
(Central Council for Research in Siddha),
Ministry of AYUSH, Govt. of India,
No. 17, SDO Quarters, Opp. Ulavar Santhai, Cauvery Nagar, MetturDam, Tamilnadu-636 401
Phone No. 04298 – 243 773 E-mail:smpgmettur@gmail.com

Date: 17/6/19

AUTHENTICATION CERTIFICATE FOR 110619003

Certified that the drug submitted by **Dr. S.L.Prakash, 3rd Year PG (Reg. No.321616008)** Department of Nanju Maruthuvam, Govt. Siddha Medical College and Hospital, Palayamkottai is identified as:

S.No	Botanical Name/Family	Tamil Name	Part	Code
1	*Piper nigrum* L./ Piperaceae	Milagu	Dry fruit	P110619003N



P110619003N

17/6/19

Dr. P. Radha
Research Officer (Botany), I/C

RESEARCH OFFICER - Botany I/C
Siddha Medicinal Plants Garden,
(CCRS, Govt. Of India)
Mettur Dam - 636 401.

சித்த மருத்துவ மூலிகைத் தோட்டம்
(மத்திய சித்தமருத்துவ ஆராய்ச்சிக் குழுமம்)
(ஆயுஷ் அமைச்சகம், இந்திய அரசு.)
सिद्ध औष धीयपादपउद्यान, कावेरीनगर, मेट्टूरबांध

SIDDHA MEDICINAL PLANTS GARDEN
(Central Council for Research in Siddha),
Ministry of AYUSH, Govt. of India,
No. 17, SDO Quarters, Opp. Ulavar Santhai, Cauvery Nagar, MetturDam, Tamilnadu-636 401
Phone No. 04298 – 243 773 E-mail:smpgmettur@gmail.com

Date: 17/6/19

AUTHENTICATION CERTIFICATE FOR 110619004

Certified that the drug submitted by **Dr. S.L.Prakash, 3rd Year PG (Reg. No.321616008)** Department of Nanju Maruthuvam, Govt. Siddha Medical College and Hospital, Palayamkottai is identified as:

S.No	Botanical Name/Family	Tamil Name	Part	Code
1	*Piper betle* L./ Piperaceae	Vettrilai	Leaf	P110619004B



P110619004B

Dr. P. Radha
Research Officer (Botany), I/C

RESEARCH OFFICER - Botany I/C
Siddha Medicinal Plants Garden,
(CCRS, Govt. Of India)
Mettur Dam - 636 401.

சித்த மருத்துவ மூலிகைத் தோட்டம்
(மத்திய சித்தமருத்துவ ஆராய்ச்சிக் குழுமம்)
(ஆயுஷ் அமைச்சகம், இந்திய அரசு)
सिद्ध औष धीयपादपउद्यान, कावेरीनगर, मेट्टूरबांध
SIDDHA MEDICINAL PLANTS GARDEN
(Central Council for Research in Siddha),
Ministry of AYUSH, Govt. of India,
No. 17, SDO Quarters, Opp. Ulavar Santhai, Cauvery Nagar, MetturDam, Tamilnadu-636 401
Phone No. 04298 – 243 773 E-mail:smpgmettur@gmail.com

Date: 17/6/19

AUTHENTICATION CERTIFICATE FOR 110619002

Certified that the drug submitted by **Dr. S.L.Prakash, 3rd Year PG (Reg. No.321616008)** Department of Nanju Maruthuvam, Govt. Siddha Medical College and Hospital, Palayamkottai is identified as:

S.No	Botanical Name/Family	Tamil Name	Part	Code
1	*Mukia maderaspatana* (L.) M. Roem./ Cucurbitaceae	Musumusukkai	Whole plant	M110619002M



M110619002M

17/6/19

Dr. P. Radha
Research Officer (Botany), I/C

RESEARCH OFFICER - Botany I/C
Siddha Medicinal Plants Garden,
(CCRS, Govt. Of India)
Mettur Dam - 636 401.

GOVERNMENT SIDDHA MEDICAL COLLEGE& HOSPITAL
PALAYAMKOTTAI

CME PROGRAMME

Conducted by
SIRAPPU MARUTHUVAM DEPARTMENT GSMCH - PALAYAMKOTTAI

Organised by
ASHTAVAIDYAN THAIKKATTU MOOSS VAIDYARATNAM

Supported by
PG Student Council Govt. Siddha Medical College, Palayamkottai

S.No: 101

CERTIFICATE

This Certifies that

Dr. S. L. Prakash

has participated in Continuing Medical Education on **"AYUSH External Therapies-II"** held at GSMCH, Palayamkottai on Dec, 4 2018

Dr. A.S.Poongodi Kanthimathi MD (s).,
Head - Dept. of Sirappu Maruthuvam

Authorised Signatory
VAIDYARATNAM

Dr. R. Neelavathy MD (s), Ph.D.,
Principal

Pre – Siddha Day Seminar on
Scope of Clinical Practice in Siddha System of Medicine

This certificate is proudly presented to Dr/~~Mr/Mrs/Ms~~........ PRAKASH S.L ....

for Participating / ~~Presenting~~ ~~Poster~~ ~~entitled~~"..........—..........

..........." in the **Pre – Siddha Day Seminar on** "Scope of Clinical Practice in Siddha System of Medicine" organized by Siddha Clinical Research Unit, Palayamkottai, a peripheral unit of Central Council for Research in Siddha(CCRS), Chennai with the support of Ministry of AYUSH held on 19th December 2018 at Govt. Siddha Medical College Auditorium, Palayamkottai.

P. Elankani
Dr P.Elankani
Organizing Secretary
Research officer(S) Sci ii i/C
SCRU, Palayamkottai

K. Sivaranjani
Dr K.Sivaranjani
Convener
Research officer(S)
SCRU, Palayamkottai

Siddha Clinical Research Unit
Government Siddha Medical College campus, Palayamkottai
Central council for Research in Siddha, Minisrty of AYUSH,Govt of India

Journal of Emerging Technologies and Innovative Research
An International Open Access Journal
www.jetir.org | editor@jetir.org

Certificate of Publication

The Board of

Journal of Emerging Technologies and Innovative Research (ISSN : 2349-5162)

Is hereby awarding this certificate to

Dr. S. L. Prakash

In recognition of the publication of the paper entitled

Physico-Chemical Analysis of Siddha Drug POORAM- A comparative Evaluation between before and after purification of raw drug

Published In JETIR (www.JETIR.org) ISSN UGC Approved & 5.87 Impact Factor

Published in Volume 6 Issue 5 , May-2019

ISSN 2349-5162 Journal of Emerging Technologies and Innovative Research

EDITOR | EDITOR IN CHIEF

JETIR1905632 | **Research Paper Weblink http://www.jetir.org/view?paper=JETIR1905632** | **Registration ID : 209897**

International Journal of Reverse Pharmacology & Health Research

INTERNATIONAL JOURNAL OF REVERSE PHARMACOLOGY AND HEALTH RESEARCH

ISSN 2589 - 3343 A Peer Reviewed Interdisciplinary Medical Journal

CERTIFICATE OF PUBLICATION

The board of "International Journal of Reverse Pharmacology and Health Research''
(ISSN 2589-3343, www.ijrphr.com) is herby awarding this certificate to Corresponding author

Dr Prakash SL

in recognition of the publication of the Research/Review Paper entitled

Review study on potential activity of Mukia maderaspatana (L) Roem

Published in Volume **2** , Issue **3** , Jul-Sep, **2019**

CODENJ: IJRPHR

Council of Science Editors

STOCKHOLM UNIVERSITY PRESS

C O P E COMMITTEE ON PUBLICATION ETHICS

Int. J. Rev. Pharmcol. Health. Res. ★ Editor-in-Chief ★ www.ijrphr.com

Editor-in-Chief
(Dr. Vijila Chandrasekar)

Reverse Publications
SINCE 2010

Member, Editorial Board

Sl.No	CONTENTS	PAGE NO
1	**INTRODUCTION**	1
2	**AIM AND OBJECTIVE**	4
3	**REVIEW OF LITERATURE** SIDDHA ASPECTS MODERN ASPECTS	 5 32
4	**MATERIALS AND METHODS** 4.1. TEST DRUG PREPARATION 4.2. QUALITATIVE ANALYSIS 4.3. QUANTITATIVE ANALYSIS	 54 58 67
5	**RESULTS** 5.1. QUALITATIVE ANALYSIS 5.2. QUANTITATIVE ANALYSIS	 75 78
6	**DISCUSSION**	91
7	**SUMMARY**	95
8	**CONCLUSION**	97
9	**BIBLIOGRAPHY**	98

ABBREVIATIONS

V1	Unpurified Pooram
V2	Purified Pooram (Method 1)
V3	Purified Pooram (Method 2)
No.	Number
Mg	Milligram
Kg	Kilogram
ML	Milliliter
%	percentage
M	Male
g%	Gram percentage
g	Gram
HCL	Hydrochloric acid
H_2SO_4	Sulphuric acid
dil	Diluted
Con	Concentrated
FTIR	Fourier Transform – Infra Red Spectroscopy
SEM	Scanning Electron Microscopy
ICP-OES	Inductively Coupled Plasma Optical Emission-Spectrometry
XRD	X-ray Diffraction
BDL	Below Detection Limit

1. INTRODUCTION

"SIDDHA SYSTEM OF MEDICINE" is one of the oldest and foremost of all other medical systems of the world. It is the first medical system indigenously developed and flourished well in South India especially Tamil speaking area for many centuries. The word "Siddha" comes from the word *siddhi*, which means an object to attain perfection or heavenly bilss. This system of medicine was put forwarded by the incredible spiritual scientists and intellectual masters called siddhars. Hence it is called as siddha medicine. They were the spiritual scientists who explored and explained the reality of nature and its relationship with man by their siddhi powers [supernatural powers] and experimental findings. The Siddhars had set a very high standard for themselves and tried to prepare medicines accordingly, a standard that even the modern scientific community dares to prescribe.

Siddha is a first system to emphasis, Health as the perfect state of physical, psychological, social and spiritual component of human being.

Thirumoolar a great saint said that,

"One that cure physical aliment is medicine
One that cure psychological aliment is medicine
One that prevent ailment is medicine
One that bestows immortality is medicine"

Siddha system of medicine not only deals with the treatment but also to prevent and promote human health through principles of "Unave marunthu, marunthae unavu" This system has its own basic principle VALI, AZHAL and IYYAM.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. - திருக்குறள் (941)

ஒருவனுடைய உணவும் செயல்களும் அளவுக்கு மேல் கூடினாலும் குறைந்தாலும் மருத்துவ நூலோர் வகுத்த வாதம், பித்தம், கபம் முதலிய மூன்றும் நோயைச் செய்யும்.

Siddha medicine can cure all types of diseases, especially the chronic diseases, which baffles and eludes even the modern sophisticated medicine. The drugs used in Siddha medicines are classified into three main groups: Thathu (inorganic substance) Thavara (Herbal products), Sangamam (Animal products). All Siddhars are well versed in preparing the higher level of Medicines using Uloogangal and kanimangal drugs. Among the Uloogangal and kanimangal Silver, gold, zinc, copper and other

metals which are mostly used in modern medicines are wonderful life saving drugs against all chronic and infectious diseases. The same is being used for thousands of years without any adverse effects in the Siddha system.

One of the most important aspects of the Siddha system is **purification** of the raw materials before using them for medicine. Such purification methods are more scientific and cannot be found in other systems. The word ***suddhi*** means “to get rid of impurities”. Suddhi (Purification) of the raw drug is a process aimed at both purifications as well as the efficacy of the raw drug. It usually involves processes like cleaning, frying, soaking and grinding with herbal juices until impurities are removed. No medicinal preparation is done without prior Suddhi process. This process helps raw material/crude drugs (moolaporutkal) to lose their undesirable or toxic effect and there by aid better dosage efficacy.

There seems to be no toxic substance among the creations of god i.e.) the mobile and immobile objects of the world. But each and every substance has the twin actions of the good and bad. Therefore if we remove the bad aspect in a substance, there remains the good aspect.

From the above, it is clear that every substance is unsuitable for health if it is not purified and freed from its toxic properties.

Accordingly the Siddhars used Chathru and Mithru Process to neutralize the poisonous effects.

“கன்மத்தால் வந்த பிணி நீக்க வேண்டி
கருவறிந்து பண்டிதரே கழரக்கேளீர்
வன்மமெள்ள சரக்குவகை குணங்களாய்ந்து
வளமான சுத்தி செய்து வழங்கினோர்க்கு
தன்மவிளி வேருண்டோ தரணிமீது
தாக்கான சொர்க்கபதி தாள்கிட்டாதோ
உன்மதமாய் முறைப்பிசகி யுதவும்பேர்க்கு
ஒரு காலும் மோட்சமில்லை யூணிப்பாரே.”

As said in this text, Siddhars has clearly emphasized the importance of purification

OBJECTIVES OF SUDDHI

- To remove impurities and toxic substances present.
- To enhances brittleness
- To improve the potency and efficacy of the drug.

- To enhance the synergistic effect through purification methods.
- Transformation of the non-edible materials in to edible materials.
- Alleviation of desired therapeutic qualities.
- To prove the unique and favourable changes from physico- chemical changes for further application of benefits of drug.

Mercurial compounds namely Panchasootham are widely used to cure complicated and chronic disease. ***Pooram*** is one among the five compounds. *Pooram* is called as MERCUROUS CHLORIDE (CALOMEL).The mercurial compound has been in use in *Siddha* since many centuries and *Pooram* is identified and indicated for many diseases in ancient Siddha Literatures. Siddha system also has described in detail about the poisonous effects of mercury and its compounds. But it also has explained in depth about the measures for purification and detoxification of the same.

There is a major need to analysis the chemical changes occurred during the purification process of raw drugs scientifically. Being a Toxicology student, I want to study the chemical changes that occur during the purification process of POORAM

2. AIM AND OBJECTIVES

AIM

- To standardize the purification process of POORAM in two methods

OBJECTIVES

- To analyze the physico- chemical properties of Poorm before and after purification in two methods as per PLIM guideline.
- To study the Quantitative analysis of Pooram before and after purification by using sophisticated instruments.

3. REVIEW OF LITERATURE

SIDDHA ASPECTS

பூரம் (pooram)

வேறு பெயர்:

துர்க்கை களை யெலியிடைச் சனிபூரஞ்

நாமதீபநிகண்டு - 20

தீட்டு விடாதாலி நக்கி பூரமதாஞ்

நாமதீபநிகண்டு - 76

பூரத்தை 64 பாடாணங்களுன் சொல்லப்படவில்லை. இருப்பினும் மருத்துவர்களால் பாசாண வகைக்குள் ஒன்றாகவே கருதப்படுகின்றது. பஞ்சசூதங்களில் ஒன்றாகும் பூரம், இது ரசம், உப்பு இவைகளால் செய்யப்படும் சரக்காகும்.

சுவை	:	உப்பு, கார்ப்பு
வீரியம்	:	வெப்பம்
பிரிவு	:	கார்ப்பு
செய்கை	:	உடல் தேற்றி
	:	உமிழ்நீர் பெருக்கி
	:	கிருமி நாசினி
	:	பித்த நீர் பெருக்கி
	:	மலமிளக்கி

பொது குணம் :

"இடைவாதசூலை, யெரிசூலை குன்மந்
தொடை வாழை வாதமாஞ் சோணி- யிடையாதோ
வொக்குரச கர்ப்பூர மொன்றே யளவொடுநல்
இக்குவெல்லத் தேழுநாளீ"

நல்ல ரச கற்பூரத்தை அளவுடன் கரும்பு வெல்லத்தில் ஏழு நாள் கொடுக்க இடுப்பைப் பற்றிய சூலை, ஆங்காங்கு எரிச்சலைத் தருகின்ற சூலை, வாதகுன்மம், தொடைவாழ வாதாத்த நோய் முதலியன தீரும்.

"கசிவன்ன கரும்பூரத்தில் சாதித்த கயஞ்சு வாசம்
பசிகலி தாபசோபம் பவுத்திரம் பிளவை குடம்
வசிதரு கிராணி யோடு வளரதி சாரமேகம்
இசிதரு மிசிவு சூலையிவை பல ரோகம் போமே"

"திரண்ட வாதங்குடல் வாதம் தீருஞ் சந்நிபதின் மூன்று
மாருண்டே குத்து மரையாப்பு மண்டை சூலை கபாலவிடி
பரங்கிச் சூலை பற்கிரந்தி பக்கக் சூலை யிவை முதல்போம்
இருண்ட மேனி பொன்னிறமாய் இதுவே கற்பம் இயம்பீரே"

சுரம், மஞ்சட் காமாலை, பித்த தோடம், சீதபேதி, நீர்க்கோவை, விரண சந்தி, ஆறாத விரணங்கள், மேக வியாதிகள், கல்லீரல் வீக்கம், குழந்தைகளுக்குண்டாகும் பேதி, கிருமி நோய், கில் வாதம், சொறி, சிரங்கு, மலபந்தம், தலைவலி தீரும்.

இரசகற்பூர வைப்பு :

"வீதமென்ற வீரவைப்புகை முறையாய்ச் சொன்னேன்
விருதான பூரணவைப்பை விளம்பக்கேளு
நேரமில்லை முன் செய்த சூதமாவில்
நிறுத்தெடுத்து நாலுபங்கு குப்பிக் கேற்றி
....
தேடியே அலைந்தாலு மித்தப்பூரம்
தேசத்தில் விபரீத மென்பார்கானே"

என்று **அகஸ்தியர் பரிபூரணம்** என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

இரசகற்பூர வைப்பைப்பற்றி,

"மயக்க மறு மிரச கற்பூரஞ் சொல்வோம்
வந்ததொரு வியாதியோம் வரிசை கேளு
மயக்கமற உப்புக்குச் செங்கல்தூள் வரிசை
பெறவுழக்கொடுத்து வைத்திடாயே"

....

உண்பதற்கு கொடுத்திடவே நிலர்த்தியாகு மோடுகிற
கிராணிக்கு வுண்மைகேனே.

- **அகஸ்திய முனிவருளிச்செய்த வைத்திய காவியம் 1500**

பூரவைப்பு - செய்முறை :

ஒரு பாண்டத்தில் 16 வராகனெடை (67.2gm) கந்தகம் வைத்து உருக்கி, 80 வராகனெடை (336gm.) இரசம் சேர்த்து துழாவிக் கொண்டிருந்தால், கறுத்து விடும், பிறகு வேறொரு பாண்டத்தில் பாதிக்குச் செங்கல் பொடியைப் போட்டு, அதன் மேல் அரைப்படி (650ml.) கறியுப்பை வைத்து, உப்பின் மேல் மேற்படி இரசகந்தியை வைத்து, சிலைமண் செய்து, 12 மணி நேரம் காடாக்கினியாய் எரித்து எடுத்துக் குளிர்ந்த பிறகு மேல் பாண்டத்தைச் சாக்கிரதையாய் நீக்கி பார்த்தால் பூரம் கட்டியாய்ப் படிந்திருக்கும்.

பஞ்ச பூதாம்சம் :

"மகத்தான பிருதிவி தாராமாமே
ஆமப்பா அப்பது தான் பூரமாகும்
ஆப்பனே தேயுதான் வீர மாகும்
காமப்பா கௌரியது வாயு வாகும்
கண்மணியே! சத்துமது லிங்க மாகும்
நாமப்பா வைம்பூத சரக்கு மைந்தா!
நலமான சரக்கு வழி நன்மை யாகும்."

பிருதிவி	-	தாரம்
அப்பு	-	பூரம்
தேயு	-	கௌரி
ஆகாயம்	-	இலிங்கம்

என நந்தீசர் கலை ஞானம் என்னும் நூலில் கூறப்படுகிறது.

நாத விந்து விபரம்

நாச்சப்பா நாக லங்களு சந்தினதாகும்
நலமான பூரமதி விந்துலாமே
போகர் நிகண்டு 1700 பக். 576, 581

பூரத்தின் சுத்தி முறைகள்:

1. "சேர்ந்திடு பூரத்திற்கு வெற்றிலை மிளகு கூட்டி
காய்ந்திடு கியாழஞ் செய்து கியாழத்தில் மூணு நாள்வை
வாய்ந்திடு கிழியாய் கட்டி வைத்திடு சுத்தியாச்சு
யாய்ந்திடு வெள்ளை சுத்திவப்புனேயறையக் கேளே"

போகர் 7000 - 2வது காண்டம் பக். 356

2. ஒரு பலம் (35 gm.) பூரத்திற்கு முலைப்பாலினால் மூன்று மணி நேரம் சுருக்கு கொடுத்து பிறகு வெள்ளைப் பூண்டு தைலத்தினால் ஒன்பது மணி நேரம் சுருக்கிட்டு எடுத்துக் கொள்ளவும்.

3. இரசகற்பூரம் 1 பலம் இதனை மெல்லிய துணியில் கிழிகட்டிக் கொள்ள வேண்டும். ஒரு மண்பாண்டத்தில் இரண்டு படி பசுவின் பாலை விட்டு அதில் 5 பலம் கஞ்சாவைத் தூள் செய்து அல்லது தண்ணீர் விட்டரைத்து கரைத்து முன் முடிப்பை பானைக்குள் தொங்கவிட வேண்டும். முடிப்பானது பானையில் அடியில் படாமல் பால் சுண்டி ¼ படியாக இருக்கும் போது இறக்கி ஆறியபின் இரசக்கற்பூரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதவே மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்யின் இரச கற்பூரமானது தூய்மையாகி விடும்.

அனுபோக வைத்தியநவநீதம் - 4ம் பாகம். பக்கம் - 91

4. இரசகர்பூரத்தைப் பிள்ளைப்பாலிலும் பின் பூண்டு நெய்யிலும் சுருக்கு கொடுக்கத் துயமையாகும்.

மரு. தேவ ஆசீர்வாதம் சாமுவேல் மருந்து செய் இயலும் கலையும் பக்கம். 292

பூரம் சேரும் மருந்துகள் :

1) பூரபற்பம்

அளவு - ½ உளுந்தெடை(32 mg) to 3 உளுந்தெடை (195 mg)

அனுபானம் - கரும்பு வெல்லம்

தீரும் நோய்கள் - பொது குணத்தின் கீழ் தரப்பட்ட நோய்கள் தீரும்.

2) வெள்ளெழுத்துத் தைலம்

தீரும் நோய்கள் - கண்ணில் வந்த மாசிதீரும், வெள்ளெழுத்துக் கண் மங்கல் போதும், பித்தமெடு குன்மங்கள், மகோதரம் தீரும்.

3) பூர எண்ணெய்

அளவு - ½ - 1 Ounce (14ml. - 20ml.) 3 days morning

தீரும் நோய்கள் - குன்மம், மாந்தம், மேகம்

4) சாந்த சந்திரோதய மாத்திரை

அளவு - 1 - 2 மாத்திரை

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள் - பித்த சுரம், காமாலை

5) சர்க்கரை மாத்திரை

அளவு - 1 மாத்திரை (65mg.)

அனுபானம் - ஓமம் குடிநீர், சுக்கு குடிநீர்

தீரும் நோய்கள் - மாந்தம், கிருமி.

6) லட்மிநாராயண மாத்திரை

அளவு - 1 மாத்திரை

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள் - கிரகணி, கழிச்சல், சுரசன்னி

7) ஊழி மாத்திரை

அளவு - 1 மாத்திரை (130 mg)

அனுபானம் - தயிர், எலுமிச்சம் பழச்சாறு

தீரும் நோய்கள் - ஊழி, அதிசாரம், கிரகணி

8) பூர பதங்கம்

அளவு - 300 - 400 mg.

அனுபானம் - ஏலக்காய் பொடி ¼ வராகன் வெண்ணையுடன்

தீரும் நோய்கள் - சன்னி சுரம், நாவறட்சி

9) பூர செந்தூரம்

அளவு - 60 - 120 mg.

அனுபானம் - பனை வெல்லம், நெய், வெண்ணை

தீரும் நோய்கள் - சன்னி சுரம், மேகம், சூலை

10) சண்ட மாருத செந்தூரம்

அளவு - 30 - 60 mg.

அனுபானம்-பனை வெல்லம், வெண்ணை, பஞ்ச தீபாக்கினி சூரணம்

தீரும் நோய்கள் - சன்னி பாண்டு, புற்றுநோய், வலிப்பு, குட்டம்

11) அட்ட கற்பூரம்

அளவு - 60 - 120 mg.

அனுபானம்-பனை வெல்லம், வெண்ணெய்,

தீரும் நோய்கள் - சுரம், சன்னி, குழிப்புண்

12) மூடி பூர பற்பம்

அளவு - 30 - 60 mg.

அனுபானம்-பனை வெல்லம், வெண்ணெய்,

தீரும் நோய்கள் - கட்டி, சூலை மேகம்

13) பால சஞ்சீவி மாத்திரை

அளவு - 1 - 2 மாத்திரை

அனுபானம்- முலைப்பால், தேன்

தீரும் நோய்கள் - குழந்தைகளுக்கான அனைத்து நோய்களும்

14) பூர களிம்பு

தீரும் நோய் - பறங்கி புண்

15) பூர பொடி

தீரும் நோய் - கொறுக்கு நோய்

யாக்கோபு திருவாய் மலர்ந்தருளிய பெருநூல் - சன்ன காண்டம் 600 என்ற நூலில்:

"நீதமாய்ப் பூரத்தை உப்பு பண்ணு ...."

என்று மூப்பு செய்ய பூரம் பயன்படுத்துவது பற்றி கூறப்பட்டுள்ளது.

உ.வி.சாம்பவசிவம்பிள்ளை 5-ம் பாகம் என்ற நூலில்: (பக்கம் 3821)

சாரத்தை விட்டால் செயனீரில்லை.

காரத்தை விட்டால் உருக்கினமில்லை

தாரத்தை விட்டால் களங்கில்லை.

வீரத்தை விட்டால் மணிகளில்லை

பூரத்தை விட்டால் குருவுகளில்லை.

மேற்கண்ட வரிகள் மூலம் பூரம் குரு செய்வதற்கு பயன்படும் என்பது புலனாகிறது.

TOXICOLOGICAL ASPECT (SIDDHA)

பூரத்தின் நஞ்சு குறிகுணம் :

பூரமானது அதிக அளவில் உடம்பிற்குள் சென்றால், நஞ்சு தன்மையைக் காட்டும்.

- பல்லீறுகளும், நாவும், வாயும், உந்தியும் தடையின் உட்பக்கமும் புண்ணாகும்,
- வாய் திறக்க முடியாது, நாவில் நீர் சுரக்கும்.
- அந்நீரில் ஒருவகையான நாற்றத்துடன் நீர்க்கசியும்,
- எதையும் விழுங்க முடியாது.
- முகத்தில் வேர்குருகும், பருவுமுண்டாகும்.
- மார்பில் பருகட்டி உண்டாகிப் புண்ணாகும்.
- இடுப்பில் வலி உண்டாகும், விரை வீங்கும்
- உள்நாக்கு புண்படும்.
- பேதியில் இரத்தம் வரும்.

ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

நஞ்சு முறிவு :

1) துளசிச்சாறு அல்லது சிற்றாமணக்கு நெய் அல்லது பாகல் இலைச்சாறு ஆகியவைகளில் ஒன்றைக் கொடுக்க வேண்டிய முறைப்படி 3 அல்லது 5 நாள் அல்லது நஞ்சு தீரும் வரை கொடுக்க தீரும்.

2) அவுரி வேர்ப்பட்டையை வெந்நீர் விட்டரைத்து ஒரு வேளைக்குச் சுண்டைக்காய் அளவு வீதம் காலையும், மாலையிலுமாக நஞ்சு தீரும் வரை கொடுத்து வர வேண்டும்.

"பகருவாய் பூரத்தைப் பாங்குடன்றின்றோர் கட்
கிகவரிய குல்லையின் சாறீக - தகவுடைய
ஏரண்ட நெய்யா மெழிலவுரி வேராகும்.
சீர் கொண்ட பாகவிலை தேர்.

3) நிலப்பனங்கிழங்குக் குடிநீர்

I. நிலப் பனங்கிழங்கு
II. வல்லாரை வேர்
III. பொன்னாங்கண்ணி
IV. கண்டுபரங்கி

நான்கு சரக்கையும் வகைக்கு 10 கிராம் எடுத்து சிதைத்து அதில் 650 ml நீர் விட்டு எட்டுக்கொன்றாகக் குடிநீர் செய்து காலையிலும், மாலையிலுமாக இரண்டு அல்லது மூன்று வாரம் கொடுத்து வர பூரத்தின் வீறு தணியும்.

நஞ்சு முறிவு நூல் (பக்கம் 25-26)

மிளகு

வேறுபெயர்

குலினை, கறி, காயம், கோளகம், திரங்கல், மிரியல், சருமபந்தம், வள்ளிசம், மரசம், குறுமிளகு, மலையாளி

மிளகின் பெயர்

“சொல்லியதோர் அருட்டனென்றும் இதற்குப்பேரு
சொற்பெரிய மதங்கள் என்றும் பேருண்டாச்சு
அல்லியதோர் மலைத்திருக்க லென்றும் பேரு
அஷ்டமாசாபதி யென்றும் இதற்குப் பேரு
கல்லியதோர் கத்தரிச னென்றும் இதற்குப் பேரு
கருத்துரட னென்றும் நேர்வளந்தா னென்றும்
மல்லியதோர் கெந்தக மென்றிதற்குப் பேரு
வசனித்தோம் மிளகினிட அத்தப் பேரே”.

அகஸ்தியர் பஞ்சகாவிய நிகண்டு- 800

மிளகு, அருட்டன், மதங்கள், மலைத்திருக்கல், அஷ்டமசாதி, கத்திரிசன், கருத்துருடன், கெந்தகம் என்றும் பல பெயர்களள்களால் அழைக்கப் படுகிறது.

தோற்றம்:

தென்னிந்தியாவில் மலையாளம், கொச்சி, குடகு, மைசூர் முதலிய மலை நாடுகளில் பயிராகும் ஒரு வகைக் கொடி. இது மரங்களைச் சுற்றி ஏறி அடர்த்தியாய் வளரும். இதன் பழத்துக்கு மிளகு என்பது பெயர். இதன் பழம் பழுத்த தோல் உதிர்ந்தால் அது வெள்ளை மிளகு எனக் கூறுவர்.

சுவை:

கைப்பு, கார்ப்பு

தன்மை:

வெப்பம்

பிரிவு:

கார்ப்பு

செய்கை:

காரலுண்டாக்கி	- Acrid
அகட்டுவாயகற்றி	- Carminative
முறை வெப்பகற்றி	- Anti Periodic
தடிப்புண்டாக்கி	- Rubefacient
வெப்பமுண்டாக்கி	- Stimulant
வீக்கங்கரைச்சி	- Resolvent
வாதமடக்கி	- Anti Vatha
நச்சரி	- Anti dote

குணம்:

இது வளிநோய்களையும் சீழ்மூலத்தையும் நீக்கும்.

ஆளவையறாக்காரம் அடைந்திருக்கும் வாத
விளைவையெல் லாமறுக்கும் மெய்யே- மிளகின்காய்
கண்டவர்க்கும இன்பமாம் காரிகையே! சீழ்மூலங்
கொண்டவர்க்கு நன்மைருதாங் கூறு.

- அகத்தியர் குணவாகடம்

பழம் (மிளகு)

இதனால் குளிர் சுரம், பாண்டு, கோழை, கழிச்சல், குன்மம், வாயு, சுவையின்மை, வெறி, மூலம், சன்னியாசம், அபஸ்மாரம், பிரமேகம், இருமல், பக்கவாதம், குய்யரோகம், சோணிதவாதம், களநோய், செவிவலி, இரத்த குன்மம், செரியாமை, காமாலை இவை போகும்.

சீதசுரம் பாண்டு சிலேத்மங் கிராணி குன்மம்
வாதம் அருசிபித்தம் மாமூலம் – ஓதுசன்னி
யாசமபஸ் மாரம் அடன்மேகம் காசமிவை
நாசங் கறி மிளகினால்

- அகத்தியர் குணவாகடம்

“கோணுகின்ற பக்கவலி குய்யவுரோ கம்வாத
சோணிதங்கழுத்திற்குள் தோன்று நோய் – காணரிய
காது நோய் மாதர் குன்மங் காமாலை மந்தமென்றீர்
ஏது நோய் காயிருக்கில் ஈங்கு”

- தேரன் குணவாகடம்

மிளகின் பெருமை:

“தீயாகி யெங்கும் திரியுமதை யாவத்து
மோயாம லெப்படியு முண்டாக்காற் – பாயாது
போந்திமிர்வா தங்கிரந்தி புண்ணீரும் மண்ணவர்க்கும்
காந்திமெய்வா தச்சலுப்பைக் காய்”.

- தேரன் வெண்பா

வளி, தீ, கப குற்றங்கள், இவை அனைத்தையும் நீக்கும். அன்றியும் திமிர்வாதம், கழலை, வளி, சளி அவைகளை அகற்றும்

எய்யுங் கிராணி பித்தமுட
னிருமல் வாய்வு தலை நோய் போம்
நையும் படியே செய்து விடும்
நாவுக் குரிசை உண்டாகும்
வைய மதனி லார்க்கு மொரு
மாதா வதுபோ லாகுமிது
பொய்யா தானா ருரைத்த மொழி
புகழ்சோ மிளகு தனைக்கொள்ளே!

கிராணி, பித்தம், இருமல், வாயு, தலைநோய் இவற்றை மிளகு போக்கிடும். நாவுக்குச் சுவை தரும். மனிதர்க்கு மாதா போல மருந்திற்கு மிளகு மாதாவாகும்.

- மூலிகை விளக்கம் தமிழ் மருத்துவ நூல் (ஓலைச் சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்) வரிசை-14 பக்கம் – 95.

சங்க இலக்கியங்களில் மிளகு

சங்க இலக்கியங்களில் மிளகுக்கு மிரியல், கறி என்ற பெயர்கள் காணப்படுக்கின்றன.

“கருங்கொடி மிளகின் காய்த்துணரப் பசுங்கறி”

- மலைபடுகடாம்

இப்பாடல் வரியால் மிளகுகொடி கரிய நிறமுடையதென்றும் பசிய இதன் காய்கள் நீண்ட கொத்துகளாக இருக்கும் என்றும் பெருங்கௌசிகனார் கூறுகிறார்.

“மைபடு சிலம்பின் கறியொடும் சாந்தொடும்”

- பரிபாடல்

மலைகளில் வளரும் மிளகுக் கொடியில் விளைந்த மிளகின் பழமாகிய மிளகு பாறைகளின் மேலே சிந்திக்கிடக்கும் என்றும், வைகை ஆற்றிலே கனியும், சந்தன கட்டைகளும் மிதந்து வருமென்றும் புலவர்கள் கூறுவர்.

''பொன்னோடு வந்து கறியோடு பெயரும்'' - அகநானூறு

''காலின் வந்த கருங்கறிமூடையும்'' - பட்டினபாலை

சுருளி என்னும் சேரநாட்டுப் பேரியாற்றினில் யவனரின் மரக்கலம் பொன்பொதிகளைகம் கொண்டு செல்லும் என்றும், பூம்புகார் துறைமுகத்திலே கடலிலே காற்றால் வந்த கரிய மிளகுப் பொதிகள் வந்து குவிந்தன என்றும் தமிழ்நாட்டு மிளகு வாணிபம் பேசப்படுகிறது.

மிளகின் சுத்தி முறைகள்:

1. கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஏழு முறை நனைத்து எடுக்கச் சுத்தியாகும்.
2. மிளகினை, நெல்லிக்காய்ச் சாற்றில் ஊற வைக்கச் சுத்தியாகும்.
3. மிளகைக் காடியில் ஊறப் போட்டு வெயிலில் வைக்க சுத்தியாகும்.
4. மிளகைப் புளித்த மோரில் ஒன்றே கால் மணி நேரம் ஊறப்போட்டு வறுக்கச் சுத்தியாகும்.
5. அமுரியிலே மிளகை அரைத்துப் போட்டு 1.3லி ஆக வற்றக் காய்ச்சவும். கழுவிக்காய வைக்கவும் நல்ல சுத்தி.
6. மிளகை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து வெயிலில் வைக்க சுத்தியாகும்

மருத்துவ பயன்கள்:

- மிளகுத்தூள் 260 – 390 மி.கி கொடுக்க பசியைத் தூண்டும். வெப்பத்தை உண்டு பண்ணி மனவெழுச்சியை உண்டாக்கும்.
- மிளகுத்தூளை குவைனாவுடன் சேர்த்து வழங்க முறைச் சுரம் நீங்கும்.
- மிளகு, பெருங்காயம், அபினி வகைக்கு 2 கிராம் எடுத்து, செவ்வையாக அரைத்து 12, மாத்திரைகள் செய்து, அதில் ஒரு மணிக்கொரு முறை ஒரு மாத்திரை கொடுத்துவர வாந்தி பேதி நீங்கும்.
- மிளகுத்தூள், வெங்காயம், உப்பு இவைகளைச் சேர்த்தரைத்துத் தலையில் காணும் புழுவெட்டுக்குப் பூச மயிர் முளைக்கும்.
- மிளகுத்தூள் 51 கிராம் நீர் 700 மில்லி விட்டு அரைமணி நேரம் காய்ச்சி வடிகட்டி அதில் 30 – 60 மி.கி வீதம் தினம் 2,3 தரம் கொடுத்து வர தொண்டைகம்மல், தொண்டைப்புண் இவைகள் நீங்குவதுந்தவிர, வயிற்றைச் சேர்ந்த நோய்களும் நீங்கும்.
- மிளகுத்தூள் 51 கிராம், தேக்கு விதைத்தூள் 68 கிராம், கசகசா 17 கிராம், தேன் 272 கிராம், ஓமம் 17 கிராம் இவற்றைச் சேர்த்தரைத்தும் ஒரு கழற்சி அளவு தினம் இரு வேளை, மூல அடித்தள்ளலுக்கு கொடுக்கலாம்.
- மிளகு பற்பொடி செய்வதற்குரிய பொருள்களில் ஒரு முக்கிய சரக்காகக் கருதப்படுகின்றது.

- மிளகுத்தூள் 10 கிராம், எருக்கம் வேர் 18 கிராம் எடுத்து, பனைவெல்லம் தகுந்த அளவு சேர்த்தரைத்து, திணையளவு மாத்திரை செய்து, ஒரு மாத்திரை தினம் இருவேளை சாப்பிட்டு வர, கொருக்கு நோய் குணமாகும்.
- மிளகு, சுக்கு, திப்பிலி, பெருஞ்சீரகம், பாறை உப்பு இவைகள் ஓர் அளவாகச் சேர்த்துப் பொடி செய்து 2-4 கிராம் உணவிற்குப்பின் வாயிலிட்டு மென்று விழுங்க, செரிப்பைப் பிறப்பித்து வயிற்று நோயையும் போக்கும்.
- மிளகு 51 கிராம், பெருஞ்சீரகம் 60 கிராம், தேன் 340 கிராம் சேர்த்து இலேகியமாக்கி, கழற்சிக்காய் அளவு தினமிரு வேளை சாப்பிட்டுவர முதியோருக்கும் மெலிந்தோருக்கும் உண்டாகின்ற மூல நோய் தணியும்.

சுத்தி முறைகளுக்கு மிளகு:

1. பூரத்துக்கு வெற்றிலை, மிளகு இவற்றைக் குடிநீராக்கி மூன்று நாட்கள் கிழியாய்க் கட்டி வைத்திட சுத்தியாகும்.
2. கம்மாறு வெற்றிலை, மிளகு ஆகிய இரண்டையும் 875 கி. வீதம் நிறுத்தெடுத்துச் சிறிது நீர்விட்டு அரைத்து, கற்கத்தை 1.3 லி நீரில் கலந்து 35 கி. பூரத்தைச் சீலையில் முடிந்து துலாயந்திரமாய் நீரில் அமிழும்படி செய்து, சிறுதீயில் எரிக்க வேண்டும். நீர் முக்காற் பங்கு சுண்டிய பிறகு பூரத்தை எடுத்து நீர் விட்டுக் கழுவி வெயிலில் உலர்த்தி எடுக்க சுத்தியாகும்.
3. தேனில், நெல், மிளகு சேர்த்துப் பத்திரப்படுத்த வேண்டும்.
4. 175 கி. இரசத்திற்கு, சித்திர மூலப்பட்டைத் தூள் 35 கி., திரிகடுகுப் பொடி 35 கி., காயம் 35 கி., இந்துப்புத்தூள் 35 கி. எடுத்து இத்துகள்களைச் சிறிது சிறிதாய்ச் சேர்த்துக் கல்வத்திலிட்டு முப்பத்தாறு மணி நேரம் அரைத்திடுக. பின்பு ஒரு குழல் கொண்டு தூள்களை ஊதி நீக்குக. இவ்விதம் ஏழு முறை செய்ய இரசம் உயர்தர சுத்தியை அடையும

நஞ்சு முறிவில் மிளகு:

“பத்து மிளகு இருந்தால்
பகைவன் வீட்டிலும் உண்ணலாம்”

என்பது பழமொழி. அந்த அளவுக்கு திறன் படைத்தது மிளகு.

1. இரச நஞ்சு முறிவுக்கு கொடுக்கப்படும் கருவேல்கொப்புளிக் குடிநீரில் (அறுகங் குடிநீர்) மிளகு சேருகிறது.
2. தாளக விடம் தீர, சித்திரமூலவேர்ப்பட்டை 10 கிராம், மிளகு 10 கிராம், கறியுப்பு 5 கிராம், குடிநீர் செய்து கொடுக்க நஞ்சு தீரும்.
3. வெள்ளைபாடாண நஞ்சு தீர, மிளகு குடிநீர் பயன்படுத்தப்படுகிறது.
4. உளுந்து நஞ்சு தீர கொள்ளுக்காய் வேளை - 4 கிராம், மிளகு - 4 கிராம், சீரகம் - 4 கிராம், தேன் - 4 கிராம் குடிநீர் செய்து கொடுக்க தீரும்.

5. எட்டி கொட்டை நஞ்சு தீர வெந்தயம் -5 கிராம், மிளகு – 5 கிராம். வெந்நீர் விட்டரைத்து வெண்ணெய் கூட்டித் தர நஞ்சின் கொடுமை தீரும்.
6. நாபி நஞ்சு தீர மிளகை பசுவின் நெய்யாலரைத்து உண்ணலாம் குடிநீர் செய்து குடிக்கலாம்.
7. பெருமருந்து நஞ்சுக்கு பொது முறிவு மிளகொன்றே ஆகும். சூரணம் அல்லது குடிநீர் செய்து உண்ணவும்.
8. பாம்புக் கடியின் வன்னி வேகம் தீர, மிளகு, திப்பிலி, இந்துப்பு, சுக்கு, கடுகு, வசம்பு, வெள்ளை பூண்டு, சாரணைவேர், வெற்றிலை, சிறு நீரில் ஊறவைத்து மூக்கில் பிழிய மூன்றாம் வேகம் தணியும்.
9. பாம்பு சமர் வேகம் தீர மாவிலை, மிளகு, காடியில் ஊறவைத்து மூக்கில் பிழிய வேண்டும்.
10. பாம்பு சமர் வேகம் தீர வசம்பு, வெள்ளைப்பூண்டு, துளசி, தும்பை, மிளகு, கந்திஉப்பு முலைப்பாலில் ஊறவைத்து மூக்கில் பிழிய நஞ்சு வேகம் தீரும்.
11. பாம்பு சண்டாள வேகம் தீர தந்தம், தும்பையிலை, வசம்பு, வெள்ளைப்பூண்டு, மிளகு, இந்துப்பு, தாய்பாலில் ஊறவைத்து மூக்கில் பிழிய நஞ்சு வேகம் தீரும்.
12. பாம்பின் அதி வேகம்: மிளகு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், தேற்றாங்காய், எட்டிக்காய், மருக்காரைக்காய், மல்லிகைப்பட்டை, வெள்ளாட்டுநீரில் ஊறவைத்து அந்நீரினாலே அரைத்து சீலையில் தடவி உலர்த்தி பின்பு அத்துணியை அவுரிச்சாறில் ஊறவைத்து மூக்கில் பிழிய நஞ்சு வேகம் போகும்.
13. 16 விரியன் கடிகளுக்கும் பொது மருந்து: பெரு வாகைப் பட்டைச் சாறு பசுவின் நெய் மிளகுத் தூள் குளிகை செய்து கொடுக்கவும்.
14. மயக்கரவு கடிக்கு மருந்து: நன்றாக காய்ந்த ஓட்டில் மிளகுப் பொடியைப் போட்டு அதிலிருந்து வரும் புகையைப் முகத்திற்படும்படி பிடித்தாலும் மயக்கரவு கடிநஞ்சு தீரும்.
15. எலிக்கடிக்கு மருந்து: திப்பிலி, மிளகு, புங்கம்வேர், மகிழம் வேர், சீந்திலிளையை, கற்றாழைச்சாறு விட்டரைத்து நஞ்சு வன்மைக்கு தக்க அளவிலுண்ணலாம். எலிக்கடி வீக்கம் தீரும்.
16. எலி நஞ்சுக்கு மருந்து: புங்கம்பட்டை, மிளகு, வெள்ளுள்ளி, வசம்பு முதலியவற்றை பழச்சாற்றிலரைத்து கொடுக்கத் தீரும்.
17. காட்டுத்தவளை கடிநஞ்சு போக, அகத்தியிலைச் சாறு 325 மிலி மிளகுத் தூள் 10 கி கலக்கி உண்ணவும்.
18. மரவட்டைக் கடி நஞ்சு தீர, சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளின் சூரணத்தைக் கொடுக்கலாம்.
19. விடமையில் – மிளகு சேருகிறது.
20. மிளகை, வெற்றிலையுடன் கலந்துண்ண அனைத்து விடங்களும் நீங்கும்.

மிளகு சேரும் மருந்துகள்:

1) மிளகு லேகியம்:

அளவு : கொட்டைப் பாக்களவு

தீரும்நோய் : 96 கபம், நீர் தோடம், சில்விடம், வாதம், வாய்வு.

- ஊர்வசி ரச வாத சிட்கா
- வைத்திய சிட்கா பஞ்சரத்தினம் பக்கம் எண் : 244

2)சதாசாகர ரசம்:

அளவு : ½ - 1 குன்றி எடை

தீரும்நோய் : கழிச்சல் வகைகள், செரியாமை, எல்லாவகை வாயு நோய்கள், மந்தாக்கினி நோய், பசி தீபனத்தை உண்டாக்கும்.

3)சன்னிபாத ரசம்:

அளவு : 1 முதல் 4 மாத்திரை

அனுபானம் : இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, துருஞ்சி நாரத்தம் பழச்சாறு

தீரும்நோய் : முறைசுரங்கள், சன்னிபாத சுரங்கள்.

- அனுபோக வைத்திய நவநீதம் பாகம் – 5

4)சூலைக்குடாரம்:

அளவு : குன்றியளவு மாத்திரை

அனுபானம் : இஞ்சிச்சாறு

தீரும்நோய் : சூலை, குன்மம்

- சித்த வைத்திய திரட்டு பக்கம் – 25

5)பிரதாபாக்கினி குமாரன்:

அளவு : குன்றியளவு மாத்திரை, 2 வேளை, 3 நாள்

அனுபானம் : இஞ்சிச்சாறு

தீரும்நோய் : எல்லா வகையான சன்னி, சுரம்

- சித்த வைத்திய திரட்டு பக்கம் – 33

6)பஞ்சதீபாக்கினிச் சூரணம்:

அளவு : மூன்று விரல் அளவு

அனுபானம் : தேன், நெய்

தீரும்நோய் : உட்ண நோய், சூலை, பித்தவாய்வு, சிலேத்தும நோய், பொருமல், செரியாமை, மயக்கம்.

- சித்த வைத்திய திரட்டு பக்கம் – 220

7) நிலவாகைச் சூரணம்:

அளவு : வெருகடி அளவு

தீரும்நோய் : வாய்வு, பித்தம், உட்ணநோய், பொருமல், விம்மல், சேத்துமநோய், வாந்தி, விக்கல்

- சித்த வைத்திய திரட்டு பக்கம் – 221

8) திரிதோட மாத்திரை:

அளவு : மிளகளவு மாத்திரை

தீரும்நோய் : சன்னி, குளிர் சுரம், கப சுரம்

- சித்த வைத்தியத் திரட்டு பக்கம் – 62

9) கந்தி மாத்திரை:

அளவு : பயறளவு

தீரும்நோய் : பழஞ்சுரங்கள்

- சித்த வைத்தியத் திரட்டு பக்கம் – 63

புறமருத்துவம்:

1) மிளகு மெழுகு:

வெளிபிரயோகமாக தடவி வர புடைகள் நீங்கும். தலைவலிக்கும் தடவலாம்.

- சித்த வைத்தியத் திரட்டு பக்கம் – 307

2) கண்காச மாத்திரை:

இதனை தேனிலுரைத்துக் கண்ணிலிட கண்காசம், கண்படலம் நீங்கும்.

- சித்த வைத்தியத் திரட்டு பக்கம் -8

வெற்றிலை

வேறுபெயர்

வெள்ளிலை, தாம்பூலம், தாம்பூலவல்லி, திரையல், நாகவல்லி, மெல்லிலை, வெள்ளிலை, மெல்லடகு.

தோற்றம்

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே வெற்றிலையானது பயன்பாட்டில் இருந்து வருகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக பயன்படுத்தும் தாவரங்களில் வெற்றிலையும் ஒன்றாகும். கிமு 2-ம் நூற்றாண்டில் இலங்கையில் எழுதப்பட்ட மகாவம்சம் என்னும் நூலில் வெற்றிலை மெல்லுவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் மிதவெப்ப மற்றும் குளிர்ச்சியான பகுதிகள் வெற்றிலை வளர்க்கப்படுகிறது. வங்காளம், ஒரிசா, தமிழ்நாடு, மும்பை போன்ற இடங்களில் இதன் இலைக்காக பயிரிடப்படுகிறது. நம் நாட்டிலும், தோட்டங்கள் சார்ந்த இடங்களில் வெற்றிலை கொடிகள் அதிகமாக பயிரிடப்படுகிறது.

வகைகள்

இஃது இலையின் நிறத்தாலும், மணத்தாலும், கார்ப்புச் சுவையாலும் **மூவகைப்படும்.** மிகுந்த மணமும், காரமும், கருப்பு நிறமும் இல்லாதது. '**வெற்றிலை**''. கருமையும் காரமும் மிகுந்தது **'கம்மாறு வெற்றிலை''.** கருப்பூர மணமும் சிறு காரமுமுடையது **''கருப்பூர வெற்றிலை.''**

சுவை	:	விறுவிறுப்பு, கார்ப்பு
தன்மை	:	வெப்பம்
பிரிவு	:	கார்ப்பு
செய்கை	:	வெப்பமுண்டாக்கி, அகட்டுவாய்வகற்றி, துவர்ப்பி, காமம்பெருக்கி, அழுகலகற்றி, வெப்பகற்றி, பசித்தீத்தூண்டி, பாற்பெருக்கி, உமிழ்நீர்ப்பெருக்கி.
பயன்தரும் பாகங்கள்	:	கொடியின் இலை மற்றும் வேர்.

பொதுகுணம்

வெற்றிலையின் இரசத்தைப் பருகில், ஐயம் சயித்தியம், காணாக்கடி, முப்பிணி இவைகள் ஒழியும்.

“ஐயம் அனுங்காண் அதன்சாரங் கொண்டக்காற்
பையச் சயித்தியம்போம் பைந்தொடியே! – மெய்யின்
கடியின் குணம் போகுங் காரவெற்றிலைக்குப்
படியுமுத்தோடமிதைப் பார்”

- **அகத்தியர் குணவாகடம்**

கம்மாறு வெற்றிலை

இதற்கு நீரேற்றம், தலைபாரம், முப்பிணி, மாந்தம், குரற்கம்மல், வயிற்றுவலி, வயிற்றுப்பீசம் ஆகியவை போம்.

“எட்டிலொன்று கிட்டினீரேற்றஞ் சிரோபார
மாட்டி விடுசன்னி மாந்தமொடு – நாட்டிற்
பரியகுரற் கம்மல் வலி பண்டியுப்பிசம் போ
மரியகம் மாறு வெற்றிலை”

- **அகத்தியம் குணவாகடம்**

வெற்றிலையை உபயோகிக்கும் முறை

வெற்றிலையைத் தாம்பூலமாய் உபயோகிக்கும் போது, அத்துடன் முக்கியமாகப் பாக்கு, சுண்ணம் சேரும் வெற்றிலையைத் தாம்பூலமாய் உபயோகிக்கும்போது, வெற்றிலையின் காம்பு, நுனி, நடுநரம்பு, பின்புறத்தில் அமைந்துள்ள தோல், இலைகளை நீக்கியே வழங்கவேண்டும்.

“நீற்றிலையும் மூக்கு நெடிய நரம்புடனே
தீற்றும் புறவுரியும் தின்றக்கால் - மாற்றவரை
வெல்லப்போர் செய்யும் வீனெடுமா லாயிடினுஞ்
செல்லப்போய் நிற்குந்திரு.”

வெற்றிலையின் வேதிப்பொருட்கள்

- கெடினின், சாவிகால், பைரோகெடிசால், யூஜினால், எக்ஸ்ட்ராகால், ஆக்சாலிக் அமிலம் போன்ற பல வேதிப்பொருள் வெற்றிலையின் மருத்துவ குணங்களுக்கு அடிப்படையாக உள்ளது.

வெற்றிலையில் உள்ள சத்துகள்

- வெற்றிலையில் 84.4% நீர்ச்சத்தும், 3.1% புரதச்சத்தும், 0.8% கொழுப்புச் சத்தும் நிறைந்துள்ளது.

இதில் கால்சியம், கரோட்டின், தயமின், ரிபோபிளேவின் மற்றும் விட்டமின் சி உள்ளது

மருத்துவ பயன்கள்:

- காய்ச்சுக் கட்டி சேர்ந்த வெற்றிலைபாக்கினால், அசைவற்ற பற்கள் இறுகும். வயிற்றுப் புழுக்கள் சாகும்.
- சுக்கு, கிராம்பு முதலிய மணல் கூடிய வெற்றிலை பாக்கால், மனக்களிப்புண்டாகும். உடலைப் பற்றிய சில நோய்களும் செரியாமையும் நீங்கும்.
- மணப்பொருளைச் சேர்ந்த பாக்கினால், மணவர்த்த வாதம், அக்கினிமந்தம், நாசிரோகம், சுவாசகாசம், அரோசகம், வயிற்றைப் பற்றிய துர்குணம் ஆகியவை நீங்கும். உடலுக்கு ஒளியும் அறிவும், விழிக்கு நலமும் உண்டாகும்.
- தொண்டையடைப்பு, குரற்கம்மலில் வெற்றிலையையும் சாம்பிராணிப் பதங்கத்தையும் மென்று சுவைக்கும்படி செய்யலாம்.
- பாற்சுரக்கவும், பால்கட்டி உண்டாக்கும் முலை வீக்கத்தைக் கரைக்கவும் வெற்றிலையைத் தணலில் வாட்டி, அடுக்கடுக்காக வைத்துக் கட்டலாம்.
- தலை பளுவுக்கு மூக்கிலும், காது குத்தலுக்குக் காதிலும் வெற்றிலைச் சாற்றில் 2-3 துளி விடலாம்.
- வெற்றிலையை எண்ணெயில் நனைத்து, விளக்கில் வாட்டி மார்பின் மேல்போட. இருமல், மூச்சுமுட்டல், கடினசுவாசம், குழந்தைகளுக்குண்டாகும் இருமல் விலகும்.
- வெற்றிலைச் சாறுடன் இஞ்சிச்சாறும் சேர்த்து, நுரையீரல் சம்பந்தமான நோயில் வழங்கலாம்.
- தீப்பட்ட புண்ணின் மீது வெற்றிலையை வைத்துக்கட்டலாம்.
- இளம் வெற்றிலைக் கொடி வேரும் மிளகுஞ் சேர்த்துச் சாப்பிட்டு வர மலட்டை உண்டாக்கும்.
- வேரைச் சுவைத்துவர பாடகர்களின் தொண்டை ஒலி பெருகும்.
- சிறுபிள்ளைகளுக்குண்டாகும் வயிற்றுப் பொருமல் மலகட்டு இவைகளைப் போக்க, வெற்றிலைக் காம்பை ஆமணக்கு நெய்யில் நனைத்து, கீழ்வாயில் வைக்கலாம்.
- காமப்பெருக்கை உண்டாக்கும் பொருள்களுடன், வெற்றிலையையும் சேர்த்துண்ண, கலவியில் இச்சை உண்டாகும்.
- 2-3 வெற்றிலையுடன் 4-5 மிளகு சேர்த்துக் குடிநீரிட்டுப் புகட்ட சிறுவர்களுக்குண்டாகும் செரியாமை விலகும்.
- வெற்றிலைச்சாறு சிறுநீரைப் பெருக்குவதற்கும் பயன்படுகிறது வெற்றிலைச் சாற்றுடன் நீர் கலந்த பாலையும், தேவையான அளவு கலந்து பருகி வர சிறுநீர் நன்குபிரியும்.

- குழந்தைகளுக்கு வரும் சுரம், சன்னிக்கு, வெற்றிலைச் சாற்றில் கஸ்தூரி, கோரோசனை, சஞ்சீவி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை மத்தித்து, தேனுடன் கொடுக்க குணமாகும். சளி, இருமல், மாந்தம், இழுப்பும் குணமாகும்.
  - இலையின் சாறு ஜீரணத்திற்கு உதவுகிறது.
  - வேர்பகுதி பெண்களின் மலட்டுத் தன்மையை போக்குகிறது.
  - **தலைவலி** :

    வெற்றிலையைக் கசக்கிச் சாறு எடுத்து அந்த சாற்றில் சிறிதளவு கற்பூரத்தைச் சேர்த்துக் குழப்பி வலியுள்ள இடத்தில் தடவினால் தலைவலி உடனே குணமாகும்.
  - **தேள் விடம்** :

    இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று தின்றால் தேள்விடம் உடனே முறியும்.
  - **சர்க்கரை வியாதி**

    சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் வேப்பிலை ஒரு கைப் பிடியளவும் அருகம்புல் ஒரு கைப்பிடியளவும் ஒரு சட்டியில் போட்டு 500ml தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்கவிடவும். தண்ணீர் அளவு 150ml ஆக குறையும் வரை கொதிக்கவிட்டு, பின்பு வடிகட்டி ஆறவைத்து வேளைக்கு 50ml வீதம் மூன்றுவேளை உணவுக்கு முன்பு சாப்பிடவும்.
  - **அல்சர்**

    அல்சர் உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் அத்தி இலை 1 கைப்பிடி, வேப்பிலை 5 ஆகியவற்றை மேலே உள்ள முறைபடி கசாயம் தயாரித்து மூன்றுவேளை அருந்தி வரவும்.
  - **தாம்பூலம் தரித்தல்**
    - நமது உடலில் சுரக்கும் 24 விதமான ‘‘அமினோ அமிலங்கள்’’ வெற்றிலையில் உள்ளன.
    - செரிமானத்துக்கும் பெரிதும் உறுதுணையாகும் இந்த ‘‘அமினோ அமிலங்களை’’ வெற்றிலை மூலம் நாம் அடையும்போது ஜீரணம் எளிதாகின்றது. அதினால் தான் நம்முன்னோர்கள் உணவுக்குப்பின் தாம்பூலம் தரிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.
    - வெற்றிலை பாக்குடன் கூடிய தாம்பூலம் ‘‘மங்கலப்பொருள்’’ என்பது பலர் அறிந்த உண்மை. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இணைந்த தாம்பூலம் மெல்லும்போது உமிழ்நீர் சுரப்பினை தூண்டுவதுடன் ஒருவித உற்சாக உணர்வினை தருகிறது.
    - பெரும்பாலான நாடுகளில் வெற்றிலைக்கு பால் உணர்வை மற்றும் நரம்பு வலுவேற்றும் சக்தி இருப்பதாக கருதப்படுகிறது. அதனால்தான் புதுமண தம்பதிகளுக்கு தாம்பூலம் தரிப்பது என்பது ஒரு சடங்காக நடைபெறுகிறது.

முசுமுசுக்கை

வேறு பெயர் -

அயிலேயம், இருகுரங்கின்கை, மொசுமொசுக்கை

தோற்றம்

இது இந்தியாவில் எங்கும் பயிராகும் ஒருவகைக் கொடி. தாவரம் முழுவதும் சொர சொரப்பான சுணைகள் கொண்டது.

சுவை	:	துவர்ப்பு, கார்பு
தன்மை	:	வெப்பம்
பிரிவு	:	கார்ப்பு
பயன்தரும் பாகங்கள்	:	இலை, வேர்
செய்கை	:	கோழையகற்றி, கபஹரகாரி

பொதுகுணம்:

இலையின் குணம்

இதனால் இருமல், கோழை, இரைப்பு, நெஞ்சிற் புகைக் கம்மல், மூக்கில் நீர்ப்பாய்தல் இவை நீங்கும்.

"இருமலுடனீளை யிரைப்பு புகைச்சல்
மருவுகின்ற நீர்த்தோடம் மாறுந் - திருவுடைய
மானே! முசுமுசுக்கை மாமூலியவ்விலையைத்
தானே யருந்துவர்க்குத் தான்"

- அகத்தியர் குணவாகடம்

வேரின்குணம்

இது, தீ நாற்றத்துடன் இறுதிய கோழை, அண்மையின்மை, மந்தம், வாந்தி, மார்பு நோய், குன்மம், அழல் இவைகளை நீக்கும்.

"கந்தம் பரவு களிச்சளியும் புன்விடமு
மந்தம் பெருவிடமும் வாந்திகளும் - அந்தம்
பெருகுரங்குக் கிச்சூடும் பித்தமுமி ருக்கா
திருகுரங்குக் கைவேருக்கே".

- இலை இரசத்தில் சிறிது கோரோசனை சேர்த்துக் கொடுக்க மேற்கூறிய நோய்களை போக்கும்.
- முசுமுசுக்கையின் இலையினால் கோழை, சுவாசம், காசம் தீரும். வேரினால் கடிந்த கோழை, மார்பு நோய், வாந்தி, குன்மம் தீரும்.
- முசுமுசுக்கை மூலிகைக்கு செம்பு சத்தும், பித்த பகரோக நாச குணங்களுமுண்டு.
- ஊறவைத்த புழுங்கலரிசியுடன், இவ்வில்லையயும் சேர்த்து அரைத்து, சிறிது உப்பு கூட்டி அடை சுட்டுக் கொடுத்து வர, கோழைக்கட்டு, இருமல்,ஈளை நீங்கும்.
- வேரை உலர்த்திப் பொடியாக்கி அல்லது குடிநீரிட்டுக் கொடுக்க, வாந்தி, மார்பு நோய் முதலியன நீங்கும்.

முசுமுசுக்கை சேரும் மருந்துகள்

1. **முசுமுசுக்கை அடை**

   தீரும் நோய் - உள்ளுக்கு சாப்பிட இருமல், கபம், கோழைக்கட்டு போம்

   Ref: மருந்து செய் இயலும் கலையும் (Page 103)

2. **முசுமுசுக்கை சூரணம்**

   தீரும் நோய் - ஈளை, இருமல், சுவாசம், காசம் குணமாகும்

   Ref: கண்ணுசாமிப் பரம்பரை வைத்தியம் (Page 411)

3. **கபரோக மாத்திரை**

   தீரும் நோய் - கோழைக்கட்டு, இருமல், பொருமல் தீரும்

   Ref: சிரோரத்தின வைத்திய பூர்ணம் (Page 125)

4. **சந்தனாதிக் கிருதம்**

   பிரயோகம் : இந்தக் கிருதத்தில் வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினம் இருவேளை கலக்கி வண்டலுடன் கொடுக்கவும்.

   தீரும் நோய்கள்: சுவாசம், இருமல், விக்கல், பித்தம், வாந்தி தீரும்

   பத்தியம் : இச்சாபத்தியம்

   Ref: கண்ணுசாமிப்பரம்பரை வைத்தியம் (Page 231)

5. மகா கலியாண கிருதம்

தீரும் நோய் - 24 மேகம், பித்தம், காசம், இருமல் தீரும்

Ref: அகத்திய வைத்திய சிந்தாமணி 4000 (Page 307)

6. இருமலுக்கு மருந்து

முசுமுசுக்கை சாறு
கண்டங்கத்திரிசாறு } வகை 2 ஆழாக்கு
தூதுவள சாறு

பசுவின் நெய் 2 ஆழாக்கு இவைகளைக் கட்டி சூரியபுடத்தில் 1 நாள் வைத்து, மிளகு, திப்பிலி, தான்றிக்காய், சிற்றரத்தை, கடுக்காய், சுக்கு, சிறுநாகப்பூ, சிறு தேக்கு, செவ்வியம் வாய் விளங்கம், திப்பிலி மூலம், கொடி வேலி, அதிமதுரம், தேங்காய் இவை வகைக்கு 2 கழஞ்சு பொடித்து போட்டு, இறுதியில், எரித்து எடுக்கவும் செய்து தினம் 35 கிராம் வீதம் 15 தினங்கள் சாப்பிட சயம், குத்திருமல், வெட்டை தொண்டை, புகைச்சல், ஈளை முதலியன தீரும். பத்தியமாய் இருக்கவும்.

ஆதாரம்: பிரம்மமுனி வைத்திய சூத்திரம் 390
(தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 306) page 263.

பசும்பால்

வேறு பெயர்

பாயம், கீரம், சுதை, பயசு, பாகு, அமுது, துத்தம், சாறு

- பசுவின் மடியில் இருந்து சக்கை நீங்கி ஒழுகும் பொருளுக்குப் பால் என்று பெயர் சொல்லப்படும்.
- இதன் நிறம் வெண்மை ஆகையினால். இதில் ஏழு நிறங்கள் கலந்துள்ளன.
